அன்பும் திராவிடமும் நமது முதல்வரின் இரு கண்கள்!

# அரசுப் பள்ளிகளில் 'யோகா வகுப்புகள்' நடத்த வேண்டும்!

## சட்டப் பேரவையில் - ஆர்க்காடு கழக உறுப்பினர் ஜெ.எல்.ஈஸ்வரப்பன் பேச்சு!

**சென்னை, பிப். 24 - சட்டப் பேரவையில் (பிப்.21) அன்று நிதி நிலை மற்றும் வேளாண் நிதி நிலை அறிக்கைகள் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு பேசிய ஆர்க்காடு தொகுதி கழக உறுப்பினர் ஜெ. எல்.ஈஸ்வரப்பன் "அரசுப் பள்ளிகளில் யோகா வகுப்புகள் நடத்த வேண்டும்" என்று குறிப்பிட்டார்.**



சட்டப் பேரவையில் - கழக உறுப்பினர் ஜெ.எல். ஈஸ்வரப்பன் பேசியதாவது:-

அக்கினிக் குஞ்சொன்று கண்டேன் - அதை
அங்கொரு காட்டிலோர் பொந்திடை வைத்தேன்
வெந்து தணிந்தது காடு - தழல்
வீரத்திற் குஞ்சென்று மூப்பென்று முண்டோ?
தத்தரிகிட தத்தரிகிட தித்தோம்

- மகாகவி பாரதியார் சொல்லியிருக்கிறார்.

எண்ணத்தில் தோன்றும் எரிதழலின் சிறுபொறியை, மனத்தில் உறைந்திருக்கும் சிறுமை எனும் மரப்பொந்தில் இட்டேன். அந்தச் சிறு பொறியின் சக்தியால் மனத்தின் சிறுமைகள் மடிந்தது மட்டுமல்லாமல், அச்சம், மடமை, துன்பம், பொய் முதலிய தீமைகள் அனைத்தையும் கொண்ட மனமென்னும் காடே ஒட்டுமொத்தமாக எரிந்தது; சிறுமைகள் சிதைந்தழிந்த நெஞ்சம் நற்குணங்கள் பொலிந்து தெளிவுற்றது.

இந்த விந்தை நிகழ்வு உணர்த்தும் உண்மை யாதெனில், வாழ்வில் அல்லவை தேய்ந்து அறம் பெருக வைக்க, பலனளிக்காத ஆயிரம் செயல்கள் செய்வதைக் காட்டிலும், செம்மைப்பட்ட சக்தி வாய்ந்த ஒரே ஒரு எண்ணம் மட்டும் போதும்; தீமைகள் எல்லாம் மாய்ந்து துயர் தீரும். எழுச்சிமிக்க எண்ணத்தின் சக்தியில் சிறியது பெரியது என்ற பாகுபாடில்லை; ஒரே ஒரு எண்ணத்தையோ, சொல்லையோ, செயலையோ கொண்டு பெரியதொரு மாற்றத்தைத் தோற்றுவிக்கும் ஆற்றல் மனிதனுக்கு உண்டு. அத்தகைய மாமனிதர் சமூகநீதிக் காவலர் நம் முதலமைச்சர் அவர்களை வணங்குகின்றேன்.

"எப்பொருள் எத்தன்மைத்தாயினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது என்ற குறளுக்கேற்ப, வாழ்ந்து கொண்டிருக்கும் நம்முடைய இளைஞர் நலன்மற்றும்விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களை வணங்குகின்றேன். தனி ஒருவனுக்கு உணவில்லையெனில் இந்த ஜகத்தினை அழித்திடுவோம் என்று கொக்களித்தார் மகாகவி பாரதியார்.

'படமாடக் கோயில் பகவதற்கு ஒன்று ஈயில்
நடமாடக் கோயில் நம்பர்க்கு அங்கு ஆகா
நடமாடக் கோயில் நம்பர்க்கு ஒன்று ஈயில்
படமாடக் கோயில் பகவதற் அது ஆமே'

அதாவது படமாடக் கோயில் நடமாடும் கோயில், நடமாடும் கோயிலாவது உயிர்கள். குறிப்பாக மனிதர்கள் கடவுளை படமாக எழுதி வைத்து வழிப்பட்டமையால் படமாடக் கோயில் என்றார்.

தன்னையொத்த மனிதன் பசித்திருக்கையில் கடவுட்கு ஒரு பொருளைக் காணிக்கையாக அளித்தால் அது நடமாடும் கோயிலான மனிதனுக்குச் சென்று பயன்தராது. ஆனால் நடமாடக் கோயிலான பசித்த மனிதனுக்கு ஒன்று ஈந்தால் அது இறைவனுக்கு சென்று சேரும் என்று கூறியுள்ளார் திருமூலர் பெருந்தகை. இதை மெய்ப்பிக்கும் வகையில் வரலாற்றுச் சிறப்புமிக்க திருப்புமுனை திட்டமான முதலமைச்சர் அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்ட, 'காலை உணவுத் திட்டத்திற்கு' 2023-2024 ஆம் ஆண்டு 2,50,000 மாணவர்களுக்கு பயன்பெறும் வகையில் வரவு - செலவுத் திட்டத்தில் 600 கோடி ரூபாய் ஒதுக்கிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை தமிழ்நாடு மக்கள் மற்றும் பள்ளிக் குழந்தைகள் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

'அருளில்லார்க்கு அவ்வுலகம் இல்லை பொருளில்லார்க்கு
இவ்வுலகம் இல்லாகி யாங்கு'

என்றார் திருவள்ளுவர்.

அதனைச் செயல்படுத்திடும் வகையில் முதலமைச்சரின் தாயுமானவர் திட்டம். இரண்டு ஆண்டுகளில் மிகவும் வறிய நிலையில் உள்ள ஆதரவற்றோர், தனித்து வாழும் முதியோர், ஒற்றை பெற்றோர் குடும்பங்கள், பெற்றோரை இழந்து குழந்தைகள், மனநலம் குன்றிய வர்கள் போன்ற சமூகத்தின் விளிம்பு நிலையில் வாழும் சுமார் 5 இலட்சம் குடும்பங்களுக்கு அரசின் உதவிகள் அனைத்தை யும் ஒருங்கிணைத்து வழங்கி, விரைவில் அவர்களை வறுமையில் இருந்து மீட்டெடுத்திட அரசு உறுதியாக உள்ளது என்று முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்கள்.

### ஒவ்வொரு விஷயத்திற்கும் ஒருவரை நாட வேண்டியிருக்கிறது!

இந்தத் திட்டம் குறித்து பார்த்தால் என்றால், உண்மையிலேயே கிராமப்புறப் பகுதியில், பெற்றோரை இழந்த குழந்தைகள் அவர்கள் தாத்தா வீட்டில், பாட்டி வீட்டில் வாழ்ந்து வருகிறார்கள். ஒவ்வொரு விஷயத்திற்கும் அவர்கள் தேடி செல்லவேண்டியிருக்கிறது. அதுமாதிரி பார்த்தால், 800 குழந்தைகளை இனம் கண்டு, அவர்களுக்கு 800 ரூபாய் கொடுத்து, சிறுசேமிப்பு திட்டம் மாதிரி நான் ஆரம்பித்துக் கொடுத்தேன். அப்போது அவர்களுடைய மனநிலையை பார்த்தால், அவர்கள் ஒவ்வொரு விஷயத்திற்கும் ஒருவரை நாடியிருக்கவேண்டியிருக்கிறது. அத்தகைய குழந்தைகளின் மனதில் இந்தத் திட்டத்தினால் என்ன பாட்டு வரும் என்று பார்த்தார். இதை நான் பாடியாக வேண்டும்.

'கடவுள் உள்ளமே ஓர் கருணை இல்லமே
தந்தை இல்லை, தாயும் இல்லை, தெய்வம் அன்றி யாரும் இல்லை
பாதம் செல்லும் பாதை காட்டிடும் தலைவா, என் தலைவா!
உண்ணும் உணவும் நீரும் தினம் தந்த தெய்வமே...
என்றும் உமக்கே நாம் நன்றி சொல்வோம்!

இது குழந்தைகளில் மனதில் வருகின்ற ஆழமான சிந்தனைக்குண்டான பாடல். நிஜமாகவே ஒரு திட்டத்தை உலகத்தில் யாரும், எந்த அரசாங்கமும் செய்திருக்கமுடியாத ஒரு திட்டம், இந்தத் திட்டம்.

அடுத்து, இளைஞர் நலன் மற்றும் விளை யாட்டுத் துறையில், கிரிக்கெட், கையுந்து பந்து, கால்பந்து, இறகுபந்து, சிலம்பம் என 33 விளையாட்டுகள் மற்றும் உடற்பயிற்சிக்கான கருவிகள் அடங்கிய, 'கலைஞர் விளையாட்டு தொகுப்புகள்' தமிழ்நாட்டில் அனைத்து ஊராட்சிகளிலும் வழங்கப்படும். இந்தத் திட்டம், சட்டமன்ற உறுப்பினர் நீங்கள் அனைத்து கிராமங்களுக்கும் சென்றால், அந்த ஊராட்சியில் இருக்கின்ற இளைஞர்கள் எங்களுக்கு கிரிக்கெட், வாலிபால், கால்பந்து வாங்கித் தாருங்கள் என்று கண்டிப்பாக கேட்பார்கள்.

இங்குள்ள அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் இருக்கின்ற பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கின்றவிதமாக, நம்முடைய இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் அனைத்து கிராமங்களையும் அலசி, ஆராய்ந்து இந்தத் திட்டத்தை அறிவித்திருக்கிறார். தமிழ்நாட்டு மக்களின் சார்பாக நாங்கள் மனதார வரவேற்கிறோம்.

அடுத்ததாக, மாற்றுத் திறனாளிகளைப் பொறுத்தவரையில், உடல் குறைபாடாக இருக்கலாம், ஆனால் உள்ள குறைபாடு இல்லை அறிவு குறைபாடு இல்லை என்பதை உணர்ந்து போற்ற வேண்டும். பாதிக்கப்பட்டவர்களைச் சிறப்பு கவனம் செலுத்தி கவனிக்கவேண்டும் என்ற தலைவர் கலைஞர் அவர்கள் கூறினார்.

### இந்தியாவிலேயே ஒரு முன்னோடித் திட்டம்!

'எதை இழந்தீர்கள் என்பதல்ல, என்ன மிச்சம் இருக்கிறது என்பதுதான் முக்கியம்' என்றார் ஸ்டீபன் ஹாகிங். அதை மனதில் வைத்து அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சியே தமிழ்நாடு அரசின் தாரக மந்திரம்.

மாற்றுத் திறன் படைத்த விளையாட்டு வீரர், வீராங்கனைகளின் *para athletics* திறமைகளை மேம்படுத்திட நாட்டிலேயே முதல் முறையாக மாற்றுத் திறனாளிகளுக்காக 6 விளையாட்டு மைதானங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. இதில் சிறப்பு இறகுபந்து, கைபந்து, வாள்வீச்சு உள்ளிட்ட ஆடுகளங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. இந்தத் திட்டம் இந்தியாவிலேயே ஒரு முன்னோடி திட்டமாக இருக்கும் கண்டிப்பாக என்று கூறிக்கொள்கிறேன்.

அடுத்து, 'கலைஞர் மகளிர் உரிமைத்தொகை' திட்டம்,

'உவந்தொருவன் வாழ்க்கை சரியாய் நடத்த
உதவுபவள் பெரும்பாலும் மனைவி ஆவாள்
அவளாலே மணவாளன் ஒழுங்கு பெற்றான்
அவளாளே மணவாளன் சக்தி பெற்றான்'

என்றார் பாரதிதான்.

இவ்வாறு பெண் சக்தியை பலர் உணர்ந்திருந்தாலும் நாட்டில் பெண்களுக்கு உரிய பிரதிநிதித்துவம் கிடைக்கிறதா என்றால், இல்லை. இதற்காக முதல் தீயை நூற்றாண்டுகளுக்கு முன்பே திராவிட இயக்கமும் அதன் ஒப்பற்ற தலைவர் பெரியார் அவர்களும், பேரறிஞர் அவர்கள், தலைவர் கலைஞர் பற்ற வைத்தார்கள். திராவிட இயக்கத்தின் நீட்சியாக இன்று நடைபெற்றுக்கொண்டிருக்கும், திராவிட மாடல் ஆட்சியில் அத்தகைய தாய்மார்களுக்கு மரியாதை செலுத்தும் விதமாக, திராவிட மாடல் அரசின் மகத்தான திட்டமான, 'கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்திற்கு' 13,720 கோடி ரூபாய் நிதி ஒதுக்கி, சுமார் 1.15 கோடி குடும்பங்களுக்கு வாழ்வு அளித்த முதலமைச்சர் அவர்களை தாயாக, தந்தையாக, அண்ணனாக எண்ணி தங்கள் நன்றியை மகிழ்ச்சியாக தெரிவித்துக்கொள்கின்றனர்.

### தாய்மார்கள் சார்பாக நன்றிகள்!

விடியல் பயணம் பொறுத்தவரையில் 50 இலட்சம் பெண்கள் தினமும் பேருந்துகளில் சராசரி பயணம் செய்கிறார்கள். மொத்தம் 444 கோடி முறை பயணம். பயணம் செய்யும் பெண்களில் 40 சதவிகிதத்தில் இருந்து 60 சதவிகிதமாக உயர்வு பெற்றிருக்கிறது. இதற்காக 3,050 கோடி ரூபாய் மானியமாக வழங்கிய முதலமைச்சர் அவர்களுக்கு தாய்மார்கள் அனைவரின் சார்பாக நன்றியைத்தெரிவித்துக்கொள்கிறேன்.

மூவலூர் இராமாமிர்தம் அம்மையாரின் 'புதுமைப் பெண் திட்டம்' தாலிக்கு தங்கம் கொடுக்கும் திட்டத்தை நிறுத்திவிட்டதாக சொல்கிறார்கள். இன்றைக்கு பார்த்தால், தாலிக்கு தங்கம் கொடுக்கும் திட்டத்தைவிட படித்து முடித்து வந்தபிறகுத்தான், அந்த தாலிக்கு தங்கத்தைக் கொடுப்பார்கள். ஆனால் இங்கே உள்ள சட்டமன்ற உறுப்பினர் மனதில் கையை வைத்து சொல்லுங்கள், எத்தனைபேர் உங்களிடம் *college admission*க்கு எங்களால் பணம் கட்டமுடியவில்லை என்று பணம் கேட்டிருப்பார்கள். அதை உணர்ந்த எத்தனையோ தாய்மார்கள் பணம் கட்ட முடியாமல், அவர்களுடைய பிள்ளைகளை படிக்க வைக்க கஷ்டப்பட்டிருப்பார்கள்.

அதை உணர்ந்த நம்முடைய முதலமைச்சர் அவர்கள், தாயுள்ளத்தோடு மாதாமாதம் ஆயிரம் ரூபாய் வழங்கும் திட்டத்தை, இந்திய அளவில் அறிவித்த ஒரே முதலமைச்சர் நம்முடைய முதலமைச்சர் அவர்கள்தான் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். அடுத்து, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களுக்கு ஒரு கோரிக்கை,

"உடம்பார் அழியில் உயிரார் அழிவர்
திடம்பட மெய்ஞ்ஞானம் சேரவும் மாட்டார்
உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே
உடம்பை வளர்த்தேன், உயிர் வளர்த்தேனே...
உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்
வள்ளற் பிரானார்க்கு வாய் கோபுரவாயில்
தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலனைந்தும் காளாமணி விளக்கே..."

இப்படி 12 ஆம் திருமுறையில் உடலைப் பற்றி நிறைய விஷயங்கள் சொல்லப்பட்டுள்ளது. ஆகவே, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள், பள்ளிக் குழந்தைகளுக்கு யோகாவைச் சொல்லிக் கொடுக்கும்போது எந்த வித சமுதாய சாயலும், எந்தவித சித்தாந்த சாயலும் இல்லாமல் யோகாவைச் சொல்லித் தர வேண்டுமென்று பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களிடத்தில் பணிவான வேண்டுகோளை வைக்கிறேன். இறுதியாக என்னுடைய உரையை முடிக்கும் விதமாக,

"அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவது ஆரும் அறிகிலார்
அன்பே சிவமாவது ஆரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருப்பாரே..." என்கிறது ஆன்மிகம்.

தாய்மார்களின் அன்பை வெளிப்படுத்தும் விதமாக மகளிர் உரிமைத்தொகை, முதியோர் மற்றும் மாற்றுத் திறனாளிகளின் அன்பை வெளிப்படுத்தும் விதமாக முதியோர் உதவித் தொகையை உயர்த்தினார், மாணவ, மாணவிகளுக்கு அன்பை வெளிப்படுத்தும் விதமாக புதுமைப் பெண் திட்டம், தமிழ்ப் புதல்வன் திட்டம், ஆதரவற்றோர்களுக்கு அன்பை வெளிப்படுத்தும் விதமாகத் தாயுமானவர் திட்டம், தமிழ்நாடு மக்களின் சுகாதாரத்தைக் காத்திட மக்களைத் தேடி மருத்துவம் திட்டம் என்கிறது திராவிட மாடல் ஆட்சி. இதைத்தான் எங்கள் முதலமைச்சர் அவர்கள் திராவிட மாடல் ஆட்சி ஆன்மீகத்திற்கு எதிரான ஆட்சி அல்ல, ஆன்மீகத்தை அரசியலுக்கும், தங்களுடைய சுயநலனுக்கும் பயன்படுத்துவோருக்கு எதிரான ஆட்சி என்று கூறினார்.

"தேசியமும் தெய்வீகமும் நம் இரு கண்கள்" என்றார் அய்யா முத்துராமலிங்கத் தேவர். அன்பும், திராவிடமும் நமது முதலமைச்சர் அவர்களுக்கு இரு கண்கள் என்று கூறி எனது உரையை நிறைவு செய்கிறேன்.

இவ்வாறு அவர் பேசினார்.

# உச்ச நீதிமன்றத்தின் 2 நெத்தியடித் தீர்ப்புகள்!

கடந்த வாரத்தில் இந்திய நாட்டின் உச்சநீதிமன்றம், இரண்டு அரிய,பெரிய வரலாற்றுத் தீர்ப்புகளை (Landmark Verdicts) வழங்கி மோடி தலைமையிலான பா.ஜ.க அரசின் ஜனநாயகப் படுகொலைகளைக் கண்டித்து இருக்கின்றது. இது இந்தியாவைக் கோரப் பிடியுடன் கவ்வி இருக்கிற சர்வாதிகாரத்தை எதிர்க்கும் அனைவருக்கும் சட்டத்தின் மூலம் கிடைத்த மகத்தான வெற்றியாகும். அத் தீர்ப்புகளில் ஒன்று பஞ்சாப் அரியானாவின் தலைநகர் சண்டிகரில் நடைபெற்ற மேயர் தேர்தல் முறைகேடுகள்; மற்றொன்று தேர்தல் நன்கொடைப் பத்திரத் திட்டம் மூலமாக நடத்திய கார்ப்பரேட் முறைகேடுகள் என்பதாகும்!

சண்டிகர் மாநகராட்சி மேயர் தேர்தல் பஞ்சாப் அரியானா உயர்நீதிமன்ற உத்தரவுப்படி, கடந்த ஜனவரி 30 ஆம் தேதி நடைபெற்ற போது. 36 வாக்குகள் பதிவாயின. அதில் காங்கிரஸ் ஆதரவோடு, இந்தியா கூட்டணி சார்பில் நின்ற ஆம் ஆத்மி கட்சியைச் சேர்ந்த வேட்பாளர் குல்தீப் குமார் என்பவர் 20 வாக்குகள் பெற்றார். அவரை எதிர்த்து நின்ற பா.ஜ.க வேட்பாளர் மனோஜ் சோன்கர் என்பவர் 16 வாக்குகள் மட்டுமே பெற்றிருந்தார். ஆனால், வேட்பாளர் குல்தீப் குமார் பெற்ற 20 வாக்குகளில் 8 வாக்குகள் செல்லாது என அதனை தேர்தல் அதிகாரி தில்லு முல்லுடன் ஜனநாயகப் படுகொலைசெய்து பா.ஜ.க வேட்பாளர் வெற்றி பெற்றதாக அறிவித்தார். மேயராகவும் பதவி ஏற்க வைத்து விட்டார். இதனை எதிர்த்து உச்சநீதிமன்றம் சென்ற குல்தீப் குமார், மூத்த வழக்கறிஞர்கள் மூலமாக நடைபெற்ற முறைகேடுகளைக் கூறி முறையிட்டார். உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி டி.ஒய்.சந்திர சூட், நீதிபதிகள் ஜே.பி.பார்தி வாலா, மானோஜ் மிஸ்ரா ஆகிய 3 பேர் கொண்ட அமர்வு, வாக்குப்பதிவு உள்ளிட்ட வீடியோக்களைப் பார்வையிட்டு ஆய்வு செய்ததுடன், விசாரணைக்குப் பின் தீர்ப்பு (20.2.24) வழங்கியது.

தேர்தல் அதிகாரி அனில் மசிஹ் என்பவர், குல்தீப் குமாருக்குக் கிடைத்த 8 வாக்குச் சீட்டுகளில் தாமே திருத்தி எழுதியதோடு, அதில் கோடு கிழித்து, எக்ஸ் குறியீட்டு இருப்பதும், அதனைச் செல்லாதது என்று கூறி பா.ஜ.க வேட்பாளர் மனோஜ் சோன்கர் வெற்றி பெற்றதாக அறிவித்திருப்பதும் தெரிய வந்தது. தேர்தல் அதிகாரியின் இந்த சர்வாதிகார அத்துமீறலைக் கண்டித்த உச்சநீதிமன்றம், அவர்மீது இந்தியக் குற்றவியல் சட்டம் 340 - பிரிவின் (Criminal procedure Code 1973, Section 340) கீழ் ஏன் நடவடிக்கை எடுக்க கூடாது? என்று, சரமாரியான கேள்வி எழுப்பியுள்ளது.

மேலும், தேர்தல் அதிகாரி உச்ச நீதிமன்றத்தினை அவமதிப்பு செய்திருக்கிறார் என்றும், இதில் ஒட்டுமொத்தத் தேர்தலை நிறுத்தி மறு தேர்தல் நடத்த வேண்டிய அவசியம் ஏதும் இல்லை(Election valid, Irregularity only in counting) என்றும், தேர்தல் அதிகாரி தான் தவறு செய்திருக்கிறார் என்பதால்,ஆம்ஆத்மி வேட்பாளர் குல்திப் குமார் தான் மேயர் தேர்தலில் வெற்றி பெற்றார் என்றும் கூறியதோடு, குற்றவாளியான அனில் மாஷிஹ் மீது வழக்குப் பதிவு செய்ய வேண்டும் என உச்ச நீதிமன்றம் கண்டித்துள்ளது.

இப்படியான உச்ச நீதிமன்றத் தீர்ப்பால் ஜனநாயகம் காப்பாற்றப்பட்டு இருக்கிறது. இந்த நீதிக்கான தீர்ப்பை இந்திய அணித் தலைவர்கள் வரவேற்பு செய்து பாராட்டியிருக்கிறார்கள். சர்வாதிகாரப் போக்கில் தேர்தல் அதிகாரி ஒன்றிய அரசின் மேலிடக் கைப்பாவையாகச் செயல்பட்டு இருக்கிறார்."தேர்தல் அதிகாரி என்பவர் சிப்பாய்! உண்மையான முகம் என்பது மோடி!" என்று காங்கிரஸ் முன்னாள் தலைவர் இராகுல் காந்தி கண்டனம் தெரிவித்துள்ளார். "ஜனநாயகத்தைக் காப்பாற்றிய உச்ச நீதிமன்றத்திற்கு எனது நன்றி! வரலாற்றுச் சிறப்புமிக்க இந்தத் தீர்ப்பு 'இந்தியா' கூட்டணிக்குக் கிடைத்த வெற்றி. ஆகவே, ஒற்றுமையாக இருந்து எதிர்காலத்தில் இந்தியாவைக் காப்பாற்றிடத் தேர்தலைச் சந்திக்க வேண்டும் என்று ஆம்ஆத்மி கட்சியைச் சேர்ந்த டெல்லி முதல்வர் அரவிந்த் கெஜ்ரிவால் சொல்லி இருக்கிறார்.



**கவிஞர் தமிழ்தாசன்**
கழக தீர்மானக் குழுத் தலைவர்

"சண்டிகர் மேயர் தேர்தல் வழக்கு குறித்து உச்ச நீதிமன்றம் அளித்துள்ள தீர்ப்பானது, நீதிக்கும், இம்மண்ணின் சட்டத்துக்குமான ஒளி விளக்காக அமைந்துள்ளது. அரசியல் அமைப்புச் சட்டப் பிரிவு 142 தனக்குள்ள அரிதினும் அரிதான அதிகாரத்தைப் பயன்படுத்தி நியாயத்தை நிலைநாட்டியுள்ளது. தேர்தல் அதிகாரியின் தில்லுமுல்லு செயல்களை உறுதியாக நிராகரித்துள்ளது. நேர்மைக்கும், மக்களாட்சி தத்துவங்களுக்கும் இந்த வெற்றி, இந்திய ஜனநாயகத்தின் வலுவான செய்தியை எடுத்துரைக்கும் பா.ஜ.க.வின் தகிடுதத்தங்களுக்கு தக்க எச்சரிக்கையும் விடுத்துள்ளது" என்று தமிழ்நாடு முதல்வரும் தி.மு.க தலைவருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் மேற்கண்ட உச்சநீதிமன்றத் தீர்ப்பை வரவேற்று ஓர் அறிக்கை வாயிலாகப் பாராட்டித் தனது கருத்தை வெளியிட்டுள்ளார்.

இது மட்டுமல்ல, கடந்த வாரம் 15ஆம் தேதி நீதியின் வரலாற்று மகுடத்தில் வைரக்கல் பதிப்பதைப் போல்,மற்றொரு தீர்ப்பை ஐந்து பேர் கொண்ட உச்சநீதிமன்ற அரசியல் அமைப்பு அமர்வு வழங்கி இருக்கிறது. கருப்புப் பணம் ஒழிப்பு என்று கூறி மோடி அரசு கொண்டு வந்த தேர்தல் நன்கொடைப் பத்திரங்கள் திட்டத்தை ரத்து செய்து, நிதி தந்தவர்கள் மற்றும் பெற்ற கட்சிகள் விவரம் மார்ச் 13 க்குள் இணையதளத்தில் வெளியிடக் கெடு விதித்து உச்சநீதிமன்றம் அதிரடி தீர்ப்பு வழங்கி இருக்கிறது!.

2017 ஆம் ஆண்டு பிப்ரவரி 1 ஆம் தேதி ஒன்றிய நிதியமைச்சராக இருந்த அருண் ஜெட்லி தாக்கல் செய்த நிதிநிலை அறிக்கையின் போது, அதிரடி மாற்றங்கள் கொண்டு வருவதாகக் கூறி "தேர்தல் நன்கொடைப் பத்திரங்கள் திட்டம்"என ஒன்றை அறிமுகப்படுத்தினார். இதன்படி அரசியல் கட்சிகளுக்கு, உச்சவரம்பின்றி யாரும் தாராளமாக நன்கொடைகள் கொடுக்கலாம். அரசியல் கட்சிகளுக்குத் தனிநபரோ, நிறுவனங்களோ காசோலை மூலமாக நன்கொடைகள் கொடுப்பதற்குப் பதிலாக, தேர்தல் நன்கொடைப் பத்திரங்கள் கொடுக்கலாம். இந்த பத்திரங்கள் ரூ.1000, ரூ.10,000, ரூ. 1 லட்சம், ரூ.10இலட்சம், ரூ.1 கோடி என்ற மதிப்பில் வாங்கிக் கொள்ள அனுமதிக்கப்பட்டதுடன், இந்தப் பத்திரத்தை வழங்கிட பாரத ஸ்டேட் வங்கிக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டது.பத்திரங்கள் வாங்கும் நபர்கள் பற்றி விவரம் ஏதும் அதில் இருக்காது. ஏற்கெனவே, இதற்கு முன்பு, அரசியல் கட்சிகள் ரூ.20,000க்கு மேல் ஒருவரிடம் நன்கொடை பெற்றால், அதன் முழு விவரத்தையும் தேர்தல் ஆணையத்திடம் தெரிவிக்கச் சட்டத்தில் வழிவகை செய்யப்பட்டிருந்தது. அதனை மாற்றும் வகையில் இத்திட்டம் கொண்டு வரப்பட்டது.

இத்திட்டமானது நிதிச்சட்டத்தில் இடம் பெற்றதாலும், இந்திய ரிசர்வ் வங்கிச் சட்டம், வருமான வரிச் சட்டம், மக்கள் பிரதிநித்துவ சட்டம் 1951 ஆகிய மூன்று சட்டங்களில் ஐந்து திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டதாலும், அவை வலுவிழந்ததாக ஆக்கப்பட்டுள்ளது என்று எதிர்க்கட்சிகளும், சட்ட நிபுணர்களும் கடுமையாக எதிர்ப்பு தெரிவித்தனர். ஆயினும், அதனை ஏற்காமல்மோடியின் ஒன்றிய அரசு, அடுத்த ஆண்டே அரசாணை வாயிலாகத் தேர்தல் நன்கொடைப் பத்திரங்கள் திட்டம் எனும் பெயரால் செயல்பாட்டுக்கு கொண்டு வந்தது. இதன் மூலம் நிறுவனங்கள் எவ்வளவு நன்கொடையும்வழங்கலாம் எனவும், வெளிநாட்டுநிறுவனங்கள் இந்தியாவிலுள்ள கிளைகள் மூலம் நன்கொடை வழங்கிட எவ்வித தடையும் இல்லை எனவும் திருத்தம் மேற்கொள்ளப்பட்டது. தேர்தல் நன்கொடை பத்திரங்கள் யார் வாங்குவது எந்தக் கட்சிக்குக் கொடுத்தார்கள் என்பன பற்றிய தகவல்கள் இரகசியமாக வைக்கப்படும் என்பதைத் தேர்தல் ஆணையமும், ரிசர்வ் வங்கியும் ஏற்காமல் தங்களது எதிர்ப்பைக் காட்டிவந்தன.

இந்நிலையில் தான் தேர்தல் பத்திரங்களுக்கு எதிராக ஜனநாயக சீர்திருத்தச் சங்கம், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, காங்கிரஸ் நிர்வாகி ஜெயா தாக்கூர் ஆகியோர் 4 மனுக்களைத் தனித் தனியாகத் தாக்கல் செய்து, உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்திருந்தனர்.

இதனை தலைமை நீதிபதி சந்திர சூட், நீதிபதிகள் சஞ்சிவ் கன்னா, பி.ஆர். கவாய், ஜே.பி. பர்தி வாலா, மனோஜ் மிஸ்ரா ஆகியோர் அடங்கிய அரசியல் சட்ட அமர்வு விசாரித்து வந்தது கடந்த 15 ஆம் தேதி மக்களாட்சித் தத்துவத்தைக் காப்பாற்றும் வகையில், மோடி அரசின் தேர்தல் தில்லு முல்லுகளுக்கு, நெத்தியடியாக வரலாற்றுச் சிறப்பு மிக்கத் தீர்ப்பு வழங்கியுள்ளது. மொத்தம் 232 பக்கத் தீர்ப்பில் நீதிபதி சஞ்சீவ் கண்ணா தனது தீர்பை 88 பக்கங்களுக்கு எழுதியுள்ளார்.

தேர்தல் பத்திரங்கள் வழங்குவதை பாரத ஸ்டேட் வங்கி உடனே நிறுத்த வேண்டும் என்று, அதற்கான நிபந்தனைகளைத் தேதி வாரியாகக் கண்டிப்புக் காட்டிக் கட்டளையிட்டுள்ளது. உச்சநீதிமன்றத் தீர்ப்பானது ஜனநாயகத்தை வலுப்படுத்தும் என்பதால், இது வரவேற்கத்தக்கது.வாக்களிக்கும் மக்களுக்கு நன்கொடை அளிப்போர் விவரம் தெரிய வேண்டும்; அதுதான் ஜனநாயகம். ஆனால், தேர்தல் நன்கொடைப் பத்திரங்கள் சட்டத்தில் வெளிப்படைத் தன்மையில்லை; அரசியல் கட்சிகளுக்குத் தேர்தல் பத்திரங்களை வழங்கியவர்கள் யார்? என்ற விவரமும் இல்லை; நிதி பெற்ற கட்சிகள் 15 நாட்களுக்குள் எவ்வித கட்டுப்பாடுமின்றிப் பணமாக மாற்றிக் கொள்ள வேண்டும். இல்லையெனில், அப்பணம் பிரதமரின் பொது நிவாரண நிதியில் சேர்க்கப்படும்? என்பது எல்லாம் கருப்புப் பணத்தை ஒழிக்கும் செயலாகுமா?.

மோடி தன் கட்சிக்காகவும், சுயநலத்திற்காகவும் கொண்டு வந்ததே இத்திட்டம். மார்ச் 2018 முதல் ஜனவரி 2024 வரை தேர்தல் பத்திரங்கள் விற்பனை வாயிலாக 16,518.11 கோடி ரூபாய் நிதி திரட்டப்பட்டுள்ளது. இந்தப் பட்டியலில் முதல் இடத்திலுள்ள பா.ஜ.க 6,566 கோடி ரூபாயை தேர்தல் பத்திரங்கள் வாயிலாக பெற்றுள்ளது. மற்ற 30 அரசியல் கட்சிகள் ரூ.5,438 கோடிபெற்றுள்ளன. கடந்த ஆண்டில் மட்டும் பா.ஜ.க.விற்கு ரூ.2,120 கோடி ஜாக்பாட்டாக கிடைத்துள்ளது.

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் உறுப்பு 21 படி (Article21) "எந்த நபரின் வாழ்க்கையையும் அல்லது தனி நபர் சுதந்திரத்தையும் சட்டத்தால் ஏற்படுத்தப்பட்ட நடைமுறைகளில் தவிர, பிற வழிகளில் மீறக் கூடாது. "(Article 21. Protection of life and personal liberty : No person shall be deprived of his life or personal liberty except according to procedure established by law) உறுப்பு 19 (Article 19) இன் கீழ் வழங்கப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளை இந்திய குடிமக்கள் மட்டுமே அனுபவிக்க முடியும். ஆனால், உறுப்பு 20, 21, மற்றும் 22 இன் கீழ் கொடுக்கப்பட்டுள்ள உரிமைகளை இந்திய குடிமக்கள் மட்டுமல்லாமல், குடிமக்கள் அல்லாதவரும் (Non Citizens) அனுபவிக்கலாம் என்பதாகும்.

உறுப்பு 21 இல் கூறப்பட்டுள்ள "சட்டத்தால் உண்டாக்கப்பட்ட நடைமுறைகளின் படி அல்லாமல், தனிப்பட்ட சுதந்திரத்தைப் பறிக்கும்"மேற்படிதேர்தல் நன்கொடைப் பத்திரங்கள் திட்டம்உறுப்பு 21 க்கு முரணானது. இங்கு 21 இல் கூறப்பட்டுள்ள சட்டம் (Law)என்னும் சொல்லில் இயற்கை நீதியும் உள்ளடங்கும். இயற்கை நீதியை உள்ளடக்காத எந்த ஒரு சட்டமும் செல்லத்தக்கதல்ல என்று பல்வேறு வழக்குகளில் உச்ச நீதிமன்றம் தீர்ப்பு கூறி இருக்கிறது என்பதையும் கருத்தில் கொள்ள வேண்டும். ஆகவே தேர்தல் நன்கொடைப் பத்திரங்கள் திட்டம் என்பது இதில் உள்ளடங்கும்.

மோடி தலைமையிலான பா.ஜ.க. அரசு கொண்டு வந்த "தேர்தல் நன்கொடைப் பத்திரங்கள் திட்டம்" இந்தியக் குடிமக்களின் பேச்சுரிமை, கருத்துரிமை வழங்கும் அரசியல் அமைப்புச் சட்டம் உறுப்பு 19 (1) (a) யினை முழுமையாக மீறும் வகையில் உள்ளது என்று சம்மட்டி அடி கொடுத்ததுடன், அச்சட்டம் செல்லாது என நீக்கறவு செய்திருக்கிறது.

இந்திய அரசியலமைப்புச் சட்ட உறுப்பு 19 ஆனது, ஆறு வகையான சுதந்திர உரிமைகளை நமக்கு வழங்கி உள்ளதில் பேச்சு மற்றும் கருத்துகளை வெளியிடும் சுதந்திரம் (19 (1) (a) Freedom of Speech and Expression),ஆயுதங்கள் இன்றி அமைதியாகக்கூடுவதற்கான சுதந்திரம்(19 (1) (b) Freedom of Assembly), கழகங்கள் மற்றும் சங்கங்கள் அமைப்பதற்கான சுதந்திரம் (19 (1) (C)Freedom to form Association and Unions) இவை அனைத்தையும் மீறித் தேர்தல் நன்கொடைப் பத்திரத் திட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. கட்சிகளுக்கு நன்கொடை அளிக்கின்ற நபர்களை நாட்டு மக்களுக்கு உரிமை உண்டு ஆனால் மோடி கொண்டு வந்த பத்திரத் திட்டத்தில் வெளிப்படைத் தன்மை இல்லை.

"எனவே,அநாமதேய தேர்தல் நன்கொடைப் பத்திரங்கள் திட்டமானது, அரசியல் அமைப்புச் சட்டத்தின் பிரிவு 19 (1) (a) இன் படி, குடிமக்களின் தகவல் அறியும் அடிப்படை உரிமையை மீறுவதாக உள்ளது என்பதால் இதனை ரத்து செய்கிறோம். மேலும்,அநாமதேய தேர்தல் பத்திரங்கள் திட்டத்திற்காக, நிறுவனங்கள் சட்டத்தின் 182 (1) இல் மேற்கொள்ளப்பட்ட திருத்தம்,சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தல் கொள்கைகளை மீறுவதாகவும், வரம்பில்லாத முறையில் அரசியல் கட்சிகளுக்குப் பெரு நிறுவனங்கள் தேர்தல் நன்கொடைப் பத்திரம் வழங்க அனுமதிக்கிறது என்பது சட்டத்தின் முன் அனைவரும் சமம் (Equality before law) எனும் அரசியலமைப்புச் சட்ட உறுப்பு 14 - க்கும், விரோதமாக அமைந்துள்ளதோடு, இப்படிப் பல்வேறு சட்டங்களில் ஒன்றிய அரசு திருத்தங்கள் மேற்கொண்டது சட்ட விரோதமாகும்.

தேர்தல் நன்கொடை பத்திரங்கள் குறித்து உச்ச நீதிமன்றம் தந்த தீர்ப்பு மிகச் சரியானது என்று தமிழ்நாடு முதலமைச்சர், தி.மு.க தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைத்தளப் பதிவில் கூறியுள்ளார். "தேர்தல் நன்கொடைப் பத்திரங்கள் அரசியலமைப்புச் சட்டத்திற்குப் புறம்பானவை என்று உச்சநீதிமன்றம் மிகச் சரியான தீர்ப்பு வழங்கி இருக்கிறது.வெளிப்படையான தேர்தல் நடைமுறையையும், அமைப்பின் ஒழுங்கையும் உறுதி செய்திடும் இந்தத் தீர்ப்பு மக்களாட்சியை மீட்டிருப்பதோடு, அனைத்து அரசியல் கட்சிகளும் சமதளத்தில் போட்டியிடும் வாய்ப்பையும் வழங்கி இருக்கிறது.மேலும், இது அமைப்பின் மீதான சாமானிய மனிதனின் நம்பிக்கையும் காப்பாற்றி உள்ளது.என்று அவர் வெளியிட்ட அறிக்கையில் தனது கருத்தைப் பதிவு செய்து இருக்கிறார்.

மோடி தலைமையிலான பா.ஜ.க. ஆட்சியில், பாசிச வெறியோடு, நடைபெற்ற அனைத்துச் சட்டமன்ற, நாடாளுமன்ற, உள்ளாட்சி மன்றத் தேர்தல்களில் முறைகேடுகள் நடத்தித் தில்லு முல்லு செய்து வெற்றி பெற்றிருப்பதைப் பல்வேறு களத்தின் சான்றுச் செய்திகள் நமக்குச் சொல்லிக் கொண்டிருக்கின்றன!இந்திய ஜனநாயகத்தைக் குழி தோண்டிப் புதைக்கும் வகையில் இந்தியாவில் "இங்கேயும் ஒரு ஹிட்லர்" என்று சொல்லக்கூடிய சர்வாதிகாரியாக இந்திய பிரதமரும், அவரது கூட்டமும் செயல் பட்டு வருகின்றனர்.

தேர்தல் நன்கொடைப் பத்திரம் என்பதை பண மசோதாவாக மாற்றியது, மோடியின் ராஜ தந்திரங்களில் ஒன்றாகும். வெளிப்படைத் தன்மை என்ற பெயரில் ஏமாற்று வித்தைகளை செய்து வந்தவர் மோடி. கார்பரேட் கைகூலிகளுக்கு கைமாறு செய்திடவே இந்த திட்டம் கொண்டுவரப்பட்டது. 6 ஆண்டுகளாக நடந்து வந்த வழக்கில் தனது அரசு எந்தவிதமான சட்ட விதிகளையும் மீறவில்லை என்று பிராமணப் பத்திரத்தை உச்சநீதிமன்றத்தில் தாக்கல் செய்து மோடி அரசு சமாளிப்பு நாடகத்தை நடத்தி வந்தது.

சர்வாதிகாரம் தற்காலிகமாக வெற்றி பெற்றாலும், நீண்டநாள் வாழ்ந்ததாகச் சரித்திரம் இல்லை; ஜனநாயகம் தோற்றதாகவும் வரலாறும் இல்லை! நீதிவென்றே தீரும் என்பதற்கு எடுத்துக்காட்டுத்தான் அண்மையில் வழங்கிய உச்சநீதிமன்றத் தீர்ப்புகள் இரண்டும், நரேந்திர மோடியின் அநீதிச் செயல்களுக்குச் சம்மட்டி அடிகொடுத்து இருக்கின்றன! தொடர்ந்து தேர்தல்களில் களவாணித் தனம் செய்து எப்படியும் வெற்றி பெற்று விடலாம் எனும் பா.ஜ.க.வின் இராஜதந்திரம் இனிமேல் எடுபடாது. நீதிமன்றம்தந்திருக்கிறதீர்ப்புகள்மூலம்மக்கள்விழித்துக்கொண்டார்கள்." "சர்வாதிகாரம் காட்டுத்தீ! ஜனநாயகம்வீட்டுவிளக்கு!" என்றார் பேரறிஞர் அண்ணா அவர்கள். இல் சர்வாதிகாரத்தை வீழ்த்துவோம்! ஜனநாயகத்தைப் பாதுகாப்போம்! நியாயச் சபைகளின் கதவுகள் திறந்தே தீரும்! நீதி என்றும் வென்றே தீரும்!